மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மேட்டூர்.

அ.வ.எண்.60/2017

| | | | |
|---|---|---|---|
| பெயர் | K.R. மணி | தொழில் | |
| தகப்பனார் பெயர் | இராமசாமி கவுண்டர் | வகுப்பு | |
| வயது | | சமயம் | இந்து |
| நாள் | 27.06.2022 | கிராமம் | |
| சாட்சி | வா.சா.1 | | |

இன்று 27.06.2022 ஆம் தேதியன்று சாட்சி இந்நீதிமன்றம் வரவழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டார்.

முதல் விசாரணை

என் தரப்பு சாட்சிய வாக்குமூலத்தை எழுத்து பூர்வ வாக்குமூலமாக முதல் தரப்பு சாட்சிய விசாரணை வாக்குமூலம் இன்று தாக்கல் செய்கிறேன். அதில் கண்டுள்ள சங்கதிகள் அனைத்தும் என்னுடைய அறிவுக்கு முழுமையாக தெரிந்த மட்டிலும் உண்மை என்று உறுதி கூறி இந்த சாட்சிய பிரமாண வாக்குமூலத்தை நான் தாக்கல் செய்கிறேன்.

எனது தரப்பு வழக்கை நிருபிக்கும் பொருட்டு வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.15 (Ex.A1 முதல் Ex.A15) வரையிலான ஆவணங்களை என் பிரமாண வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ளபடி குறியீடு செய்கிறேன்.

வாதி தரப்பு வழக்கை நிருபிப்பதற்காக கூடுதல் ஆவணங்களை குறியீடு செய்யவேண்டி வாதி தரப்பு வேண்டுகோளுக்கிணங்க முதல் விசாரணை மற்றொரு தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது. (பிரதிவாதிகள் தரப்பில் வா.சா.ஆ.3 முதல் வா.சா.ஆ.6 வரையிலான ஆவணங்களின் உண்மை தன்மை குறித்து ஆட்சேபிக்கப்பட்டும், வா.சா.ஆ.7 முதல் வா.சா.ஆ.15 வரையிலான ஆவணங்கள் மேற்படி வா.சா.ஆ.3 முதல் வா.சா.ஆ.6 வரையிலான ஆவணங்களின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டவை என்பதால் மேற்படி ஆவணங்கள் ஆட்சேபணைக்குட்பட்டு குறியீடு செய்யப்பட்டது).

ஒம்/−திரு. R.மணிவர்மன்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.